# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஊட்டி வருகையையொட்டி விழா நடைபெறும் அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் முன்னேற்பாடு பணிகள்

## கலெக்டர் லட்சுமிபவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டார்



**ஊட்டி, மார்ச்.28-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 05.04.2025 அன்று நீலகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்து, 06.04.2025 அன்று உதகை அரசு கலை கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளதை முன்னிட்டு விழா நடைபெறும் இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேற்று (27.03.2025) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது பொதுப்பணித்துறையின் சார்பில்; அமைக்கப்பட்டு வரும் மேடை, அரங்க பணிகளையும், நகராட்சித்துறையின் சார்பில் விழா நடைபெறும் இடத்தில், பொதுமக்கள் மற்றும் பயனாளிகளுக்கு, தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணிகளையும், நலத்திட்ட உதவிகள் பெறும் பயனாளிகள் அமரும் இடங்களையும், காவல் துறையின் சார்பில், பாதுகாப்பு பணிகள் மற்றும் வாகன நிறுத்திமிடம், உள்ளிட்டவற்றை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் ரமேஷ், ஊட்டி நகராட்சி ஆணையாளர் ஸ்டேன்லி பாபு, நகராட்சிப் பொறியாளர் சேகரன், வட்டாட்சியர் சங்கர்கணேஷ் உட்பட அரசு த்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சத்தியமங்கலம் பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் குண்டம் பெருந்திருவிழா முன்னேற்பாடு பணிகள்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நேரில் ஆய்வு



**ஈரோடு,மார்ச்.28-**

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பண்ணாரி பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் குண்டம் பெருந்திருவிழாவினை முன்னிட்டு கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, முன்னேற்பாடு பணிகள் குறித்து, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, கலெக்டர் பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், குண்டம் பெருந்திருவிழா 07.04.2025 (ம) 08.04.2025 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளதையொட்டி, திருக்கோயிலில் பக்தர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, அருகாமையில் உள்ள மாநிலம் மற்றும் மாவட்டங்களுக்கு சிறப்பு பேருந்து வசதிகள், பந்தல், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த தற்காலிக தடுப்பு சுவர்களை அமைத்தல், மருத்துவ குழுகள், தீத்தடுப்பு வாகனம் ஏற்பாடு செய்தல், தடையில்லா மின்சார வசதி, தரைதளத்தினை தூய்மையாக பராமரித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, திருவிழா நல்ல முறையில் நடைபெற ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். ஆய்வின்போது, இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் பரஞ்ஜோதி, துணை ஆணையர் செயல் அலுவலர் இரா.மேனகா, உதவி ஆணையர் சுகுமார், துணை காவல் கண்காணிப்பாளர் முத்தரசு உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நந்தா பொறியியல் கல்லூரியில் 24வது ஆண்டு விழா




**ஈரோடு மார்ச் 28-**

ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியில் 24 வது ஆண்டு விழாவும், மாணவர்கள் பதவியேற்பு விழாவும் நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் திரு வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்லூரி முதல்வர் யு.எஸ். ரகுபதி நடப்பு கல்வியாண்டின் போது மாணவர்கள், உதவி பேராசிரியர்கள், பேராசிரியர்கள் புரிந்த சாதனைகள் மற்றும் ஒவ்வொரு துறையிலும் மாணவர்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் செய்யப்பட்ட அடிப்படை வசதிகள் அடங்கிய ஆண்டறிக்கையினை வாசித்தார்.இவ்விழாவில், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ். திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி . எஸ். ஆறுமுகம், நந்தா தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் திரு ச.நந்தகோபால் மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அதிகாரி ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.இதனைத் தொடர்ந்து, நடந்து முடிந்த பருவத்தேர்வுகள் மற்றும் பல்வேறு பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தமான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், தனக்கு ஒதுக்கப்பட்ட பாடங்களில் நூறு சதவீதம் தேர்ச்சி மற்றும் ஆராய்ச்சி துறைகளில் சாதனைப் படைத்த ஆசிரியர்களுக்கும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் திரு வி. சண்முகன் கேடயங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கி கௌரவித்தார்.பின்னர் நடைபெற்ற அடுத்த கல்வியாண்டிற்கான செயலர்கள், துணை செயலர்கள் உட்பட அனைத்து துறைச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான பதவியேற்பு விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ செல்வங்களுக்கு பதவி பிரமாணம் செய்து, அதற்கான முத்திரையினை அணிவித்து பாராட்டி பேசினார்.மேலும், மேடைக்கு வெளியே நடத்தப்பட்ட தமிழ் கட்டுரை மற்றும் வாசிப்பு, கழிவுகளிலிருந்து சிறந்த பொருட்களை உருவாக்குதல், சிறந்த குறும்படங்கள் மற்றும் உடனடி புகைப்படங்கள் எடுத்தல் போன்ற கலைமிக்க போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், மேடையில் கண்கவர் கலை நிகழ்ச்சியான நடனங்கள். பாடல்கள் மற்றும் இசையிலும் தங்களது திறன்களை வெளிப்படுத்தி முதல் மூன்று இடங்களை தக்க வைத்துக் கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.பின்னர், கலைத்திருவிழாவின் போது மேடையில் நடைபெற்ற மாணவ, மாணவியர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த இசை, பாடல்கள் மற்றும் நடனங்கள் அரங்கேற்றப்பட்டனஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்திருந்த கல்லூரி முதல்வர், ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு கல்லூரி நிர்வாகத்தினர்கள் தங்களது பாராட்டுக்களைத் தெரிவித்து வாழ்த்தினார்கள்

# அகில இந்திய ரயில்வே ஓடும் தொழிலாளர் கழகம் சார்பில் போராட்டம்



**ஈரோடு மார்ச் 28-**

அகில இந்திய ஓடும் தொழிலாளர் கழகம் தட்சண ரயில்வே எம்ப்ளாயீஸ் யூனியன் ரயில்வே தொழிலாளர் விடுதலை முன்னணி அகில இந்திய. எஸ்சி எஸ்டி கழகம் சார்பில் ஈரோடு ரயில்களை முன்பு போராட்டம் நடைபெற்றது இணைச் செயலாளர் ஆர் ஸ்ரீஜித் வரவேற்றார் இணை பொதுச்செயலாளர் நரசிம்மன் துவக்க உரையாற்றினார் சேலம் கோட்டை செயலாளர் அருண் சிறப்புரை ஆற்றினார் துணை பொதுச் செயலாளர் பிஜு தலைமை தாங்கினார் இந்த போராட்டத்தில் விருப்ப பணியிட மாறுதல் விரைந்த செய்திட வேண்டும் வாரத்தில் ஒரு நாளாவது முழு இரவு ஓய்வு வழங்கிட வேண்டும் எஞ்சிலே கேமரா வைத்து படம் பிடித்து சின்ன சின்ன காரணங்களுக்காக விதியை மீறி தண்டனை வழங்குவதை நிறுத்த வேண்டும் உருப்பட பல்வேறு கோரிக்கையில் இதில் கோஷங்களாக எழுப்பப்பட்டது இதில் நிர்வாகிகள் தொழிற்சங்க நிர்வாகிகள் பி.வி நரசய்யா சிவகுமார் ஆரதி ஜார்ஜ் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர் கூட்டத்தின் முடிவில் இணைச் செயலாளர் கே. ரியாஸ் நன்றி கூறினார்

# கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் சொற்பொழிவு



**ஈரோடு மார்ச் 28-**

கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் உளவியல் துறையில் சிறப்புச்சொற்பொழிவு மற்றும் நிறைவு விழா நடைபெற்றது

கொங்கு சுலை அறிவியல் கல்லூரியின் உளவியல் துறையில் மாணவ, மாணவிகளுக்கான மனிதவள மேலாண்மை' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் நிறைவு விழாவானது 24.03.2025 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பெங்களூர் ப்ரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் தனியார் நிறுவனத்தின் சீனியர் லேர்னிங் & டெவலப்மெண்ட் அனலைஸ்ட் ச.பிரவீன் ராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தன்னுடைய வாழ்வியல் அனுபவத்தினையும், ஒரு வேலைவாய்ப்பினை எவ்வாறு பெற வேண்டும் என்பது குறித்தும் சிறப்புரையாற்றினார். அதனைத்தொடர்ந்து நிகழ்வில் மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை உளவியல்துறையின் துறைத்தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர் எம். சுபிட்ஷா அவர்களுடன் உளவியல் துறையின் பேராசிரியர்கள் ஒன்றிணைந்து சிறப்பாக செய்திருந்தனர். மேற்கண்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்த உளவியல் துறைப்பேராசிரியர்களை கல்லூரியின் தாளாளர் பி.டி.தங்கவேல் மற்றும் கல்லூரியின் முதல்வர் முனைவர்.ஹ.வாசுதேவன் இணைந்து பாராட்டினார்.

# எல்லை மாரியம்மன் கோவில் பொங்கல் திருவிழா



**ஈரோடு மார்ச் 28-**

ஈரோடு வீரப்பன் சத்திரம் மல்லிநகர் வீட்டு வசதி வாரியத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ பாலவிநாயகர்ஸ்ரீ பால முருகர் ஸ்ரீ எல்லை மாரியம்மன் ஸ்ரீ சமயபுரம் மாரியம்மன் ஸ்ரீ குண்டத்து காளியம்மன் திருக்கோயில் 25 ஆம் ஆண்டு குண்டம் இறங்குதல் மற்றும் பொங்கல் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது முன்னதாக 18ஆம் தேதி செவ்வாய்க்கிழமை பூச்சாட்டுகளுடன்தொடங்கிய நிகழ்ச்சி தொடர்ந்து புதன்கிழமை குண்டம் இறங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு குண்டம் இறங்கினர் இதைத் தடர்ந்து

நேற்று வியாழக்கிழமை மஞ்சள் நீராட்டு விழா மற்றும் சாமி ஊர்வலம் சென்று வரும் நிகழ்ச்சி நடைபெற்றது நாளை மறு பூஜை நடைபெறுகிறது விழா ஏற்பாடுகளை ஊர் கவுண்டர் கே எம் சக்தி கொத்துக்காரர் கே மாது தர்மகர்த்தா கே எம் சுரேஷ் அர்ஜுனன் மற்றும் கந்தசாமி பூசாரி தியாகராஜன் உட்பட பலர் செய்கின்றனர் விழாவை தொடர்ந்து அன்ன தானம் வழங்கப்பட்டது

# நந்தா தொழில்நுட்ப கல்லூரியில் 17 வது ஆண்டு விழா




**ஈரோடு மார்ச் 28-**

ஈரோடு நந்தா தொழில்நுட்ப கல்லூரியின் 17வது ஆண்டு விழா "டெக்பிரீஸ் -2K25" நந்தா தொழிநுட்ப வளாகத்தின் கலைஅரங்கில் நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமை தாங்கினார். முதல்வர் ச.நந்தகோபால் ஆண்டறிக்கையினை வாசித்தார்.மேலும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் .எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ். திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி . எஸ். ஆறுமுகம், நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் யு.எஸ். ரகுபதி மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அதிகாரி ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இதனை தொடர்ந்து நடந்து முடிந்த பருவத்தேர்வுகள் மற்றும் கல்லூரியில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் தனக்கு ஒதுக்கப்பட்ட பாடங்களில் நுற்று சதவீதம் தேர்ச்சி கொடுத்த ஆசிரியர்களுக்கும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் பரிசுளை வழங்கி பாராட்டினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற மாணவ, மாணவியர்களின் கண்கவர் கலை பல்வேறு நடன கலை நிகழ்ச்சிகளில் திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

# ஊட்டியில் வாகனம் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் கவன ஈர்ப்பு போராட்டம்



**ஊட்டி, மார்ச்.28-**

ஊட்டியில் வாகன பணிமனை ஏற்படுத்தித் தர வலியுறுத்தி மோட்டார் வாகன பழுது பார்க்கும் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தினர் கவன ஈர்ப்பு போராட்டம் நடத்தினர்.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட மோட்டார் வாகனம் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் உள்ளனர். பல இடங்களில் வாகனங்களை நிறுத்தி பணி செய்யும் தொழிலாளர்களுக்கு போதிய பாதுகாப்பின்மை, இட வசதி இல்லாமல் மழைக்காலங்களில் வாகனங்களை பழுது பார்க்கும் நிலை தற்போது வரை இருந்து வருகிறது. இந்தநிலையில் கடந்த 2023 ஆண்டிலிருந்து நகரில் ஏதோ ஒரு பகுதியில் தங்களுக்கு ஒரே இடத்தில் ஆட்டோ நகர் ( பணிமனைகள்) ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்திடம் மனு அளித்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் தற்போது வரை அவர்களுக்கு இடம் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் மோட்டார் வாகன தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தினர், கடந்த திங்கட்கிழமை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வாயில் கருப்பு துணியை கட்டி கலெக்டரிடம் மனு அளித்தனர் இந்த நிலையில் நேற்று ஊட்டி ஏடிசி திடலில் கவன ஈர்ப்பு போராட்டம் நடத்தினர். இதற்கு சங்கத் தலைவர் வினோத்குமார் தலைமை தாங்கினார். செயலாளர் மார்சல் முன்னிலை வகித்தார்.

இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகையில், தமிழகத்தில் ஒரு சில மாவட்டங்களில் மோட்டார் பழுது பார்க்கும் தொழிலாளர்களுக்கு தனியாக அரசு இடத்தில் ஒரே இடத்தில் பணிமனைகள் கொடுக்கப்பட்டுள்ளது. ஊட்டியில் அது போன்று பணிமனைகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.நகரில் ஏதாவது ஒரு பகுதியில் தங்களுக்கான பணிமனைகள் ஏற்படுத்தித் தர இடம் வழங்க வேண்டும். நகராட்சி மற்றும் வருவாய்த் துறை இடங்களில் பணிமனைகள் அமைத்துக் கொடுத்தால் அதற்கான வாடகை தொகையை கட்ட தயாராக உள்ளோம். ஆனால் நாங்கள் வைக்கும் கோரிக்கைகளுக்கு இதுவரை மாவட்ட நிர்வாகம் செவி சாய்க்கவில்லை என்றனர். இதன் பின்பு தங்களுக்கு இடம் வழங்க வேண்டி கோஷங்கள் எழுப்பி அரசுக்கு தங்களது கோரிக்கைகளை தெரிவித்தனர்இதில் பொருளாளர் அருண்குமார், துணைத் தலைவர் ஜார்ஜ், துணைச் செயலாளர்கள் ஜலில், மைக்கேல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை
நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை

# அசோகபுரம் அனைத்து வணிகர்கள் சங்க பொதுக்குழு கூட்டம்




**ஈரோடு மார்ச் 28-**

ஈரோட்டில் அசோகபுரம் அனைத்து வணிகர்கள் சங்கம் 10ஆம் ஆண்டு தொடக்க விழா மற்றும் பொதுக்குழு கூட்டம் சங்கத் தலைவர் கமலஹாசன் தலைமையில் நடைபெற்றதுசங்க செயலாளர் .சதீஸ்குமார் வரவேற்றார்

நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் ஈரோடு மாவட்ட தலைவர் .இரா.க.சண்முகவேல், மாவட்ட செயலாளர் .பொ.இராமச்சந்திரன், மாவட்ட துணைத் தலைவர் .வேலா பி எஸ் .சுந்தரராஜன், மாவட்ட துணைச் செயலாளர் பி..மாதேஸ்வரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் .அ.லாரன்ஸ் ரமேஷ், மாவட்ட செய்தி தொடர்பாளர் எ ஆர்.சாதிக் பாட்சா ஆகியோர் கலந்து கொண்டு மாநாடு விளக்கவுரை ஆற்றினர்.மாநாட்டிற்கு சங்கம் சார்பில் 100பேர் கலந்து கொள்வதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிறைவில் சங்க பொருளாளர் சுப்பிரமணியன் நன்றி கூறினார் . கூட்டத்தில் ஈரோடு மாநகர இணைப்புச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

# சேலம் மாவட்ட பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம்

## மாநில தலைமை தகவல் ஆணையர் தலைமையில் நடைபெற்றது



சேலம்,மார்ச்.28-

மாநில தலைமை தகவல் ஆணையர் முகமது ஷகீல் அக்தர், (ஓய்வு) தலைமையில், கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் (27.03.2025) நடைபெற்றது. பின்னர், மாநில தலைமை தகவல் ஆணையர் தெரிவித்ததாவது:

அரசு மற்றும் அரசு உதவிபெறும் நிறுவனங்கள், துறைகள், அலுவலகங்கள் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் குடிமக்களுக்குத் தேவையான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இன்றையதினம் மாவட்ட அளவிலான பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து யாரிடம் தகவல்களைக் கோரலாம், தகவல்கள், பதிவுரு, தகவல் கோரி விண்ணப்பம், விண்ணப்பத்தை மாறுதல் செய்தல் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பிரிவுகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. அதே போன்று, தகவல் ஆணைய விசாரணை, முதலாம் மேல்முறையீடு, தகவல் ஆணையத்தின் முன்னர் இரண்டாம் மேல்முறையீடு, முக்கியப் பிரிவுகளின் தண்டனை விவரங்கள், மறுக்கப்பட வேண்டிய தகவல்கள் உள்ளிட்ட விவரங்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

தகவல்கள் மறுக்கப்படும்போது மனுதாரருக்கு கட்டாயம் மேல்முறையீட்டு அலுவலரின் விவரம் தெரிவிக்கப்பட வேண்டும் என்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மனுதாரர்களிடம் இருந்து கட்டணம் வசூலிக்கக்கூடாது என்பது குறித்தும், கோரிய தகவல் அலுவலகத்தில் ஒரு பகுதியாக மட்டும் இருந்தால் அவற்றை மட்டும் பிரித்தெடுத்து வழங்க வேண்டும் போன்ற விவரங்கள் குறித்தும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாநில தலைமை தகவல் ஆணையர் முகமது ஷகீல் அக்தர், இ.கா.ப., (ஓய்வு) தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக பொதுத்தகவல் அலுவலர்களின் பல்வேறு சந்தேகங்களுக்கு மாநில தலைமை தகவல் ஆணையர் இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் விளக்கமளித்தார்கள்.

இக் கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) தே.பொன்மணி, மாநகர காவல் ஆணையர் பிரவீன் குமார் அபினபு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், மாநகர காவல் துணை ஆணையர் (தலைமையிடம்) பா. கீதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) அ.ஜெ. செந்தில் அரசன் உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பொது தகவல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விநாயகா மிஷன் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரிக்கு கல்லூரிக்கு சிறந்த கல்லூரிக்கான விருது: அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்

சேலம்,மார்ச்.28-

தமிழ்நாட்டின் முன்னணி செய்தி தொலைக்காட்சி நிறுவனமானது ஆண்டுதோறும் கற்றல் விருதுகள் என்ற தலைப்பில் கல்வி தரத்திலும் சேவையிலும் திறம்பட செயலாற்றி வரும் கல்வி நிறுவனங்களை அடையாளப்படுத்தி அங்கீகரிக்கும் விதமாக விருது வழங்கும் விழாவினை நடத்தி வருகிறது.



இதன் அடிப்படையில் இவ்வாண்டிற்கான கற்றல் விருதுகள் வழங்கும் விழா சமீபத்தில் சென்னையில் நடத்தப்பட்டது. விழாவிற்கு தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். இவ்விருது வழங்கும் விழாவில் பல்வேறு கல்வி நிறுவனங்களை சேர்ந்த தாளாளர்கள், கல்வி துறையை சார்ந்த வல்லுநர்கள் என பலர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் விநாயக மிஷன் பல்கலைக்கழகத்தின் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரிக்கு "அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்வியில் சிறந்து விளங்கும் கல்லூரி "என்ற விருது அமைச்சர் மூலம் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்விருதினை துறையின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் பெற்றுக் கொண்டார். மேலும் இதனைக் குறித்து துறையின் டீன் கூறியதாவது:

எங்கள் கல்லூரியானது 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 23 ஆண்டுகளாக மாணவர்களின் நலனுக்காகவும் அவர்களின் வளர்ச்சிக்காகவும் பல்வேறு புதுமைகளை கற்றல் மற்றும் கற்பித்தலில் புகுத்தி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கு அடித்தளமிட்டு வருகிறது. எங்களின் இத்தகைய 23 ஆண்டுகால கல்வி சேவையினையும், மாணவர்களுக்கு வழங்கப்படும் வரும் கல்வித்தரத்தினையும் ஆராய்ந்து இவ்விருதானது வழங்கப்பட்டுள்ளது என்றார். மேலும் எங்களின் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியானது புதுச்சேரி ஆறுபடை வீடு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி வளாகத்திலும், சென்னை ஆறுபடைவீடு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்திலும் செயல்பட்டு வருகிறது என்றார். இவ்வாறான விருதினை பெறுவதற்கு தனது சிறந்த பங்களிப்பினை ஆற்றி வரும் துறையின் டீனுக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர். கணேசன் மற்றும் துணைத் தலைவர் டாக்டர் அனுராதா கணேசன் மற்றும் பேராசிரியர்கள் என அனைவரும் தங்களின் வாழ்த்தினையும் பாராட்டினையும்தெரிவித்தனர்.

# அரசு பள்ளி ஆண்டு விழா



காவேரிப்பட்டணம்,மார்ச்.28-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் குடிமேனஅள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஆண்டுவிழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியை சிந்தாமணி தலைமை தாங்கினார். உதவிஆசிரியர் பழனி வரவேற்பு பேசினார். ஆசிரியை கலைமதி ஆண்டறிக்கை வாசித்தார். நிகழ்ச்சியில் ஆண்டு விழாவையொட்டி பள்ளி மாணவர்களுக்கு பேச்சு போட்டி,விளையாட்டு போட்டி, கட்டுரை போட்டி, கவிதை போட்டி, ஓவிய போட்டி உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டது. அதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. ஆண்டுவிழா நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஊர் பொதுமக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியர்களுக்கு ஊர் பொதுமக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது

# ஊத்தங்கரை வித்ய விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ரமலான் பெருவிழா



கிருஷ்ணகிரி,மார்ச்.28-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வித்ய விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ரமலான் பெருவிழா பள்ளியின் அறக்கட்டளை தலைவர் பழனிவேல் தலைமையில் பள்ளியின் தாளாளர் சக்திவேல் தொடக்க உரை நிகழ்த்தினார். இதில் சிறப்பு விருந்தினராக ஊத்தங்கரை பேரூராட்சி தலைவர் அமானுல்லா, ஊற்றங்கரை தமிழ் சங்கம் இணை செயலாளர் கவிஞர் சாகுல் அமீத் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களின் மத்தியிலே உலகிற்கு வழிகாட்டும் அண்ணல் விளக்கு என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் பள்ளியின் இருபால் ஆசிரியர் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள்

## கலெக்டர் ச.தினேஷ் குமார் நேரில் ஆய்வு



கிருஷ்ணகிரி ,மார்ச்.28-

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட போடிச்சிப்பள்ளி, அக்கொண்டப்பள்ளி, சின்னட்டி மற்றும் ஜெக்கேரி ஆகிய ஊராட்சிகளில், ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வேளாண்மைத் துறை சார்பாக நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் ச.தினேஷ் குமார் (27.03.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கலெக்டர் , கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், போடிச்சிப்பள்ளி ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், ரூ.9 இலட்சத்து 32 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் புதிய நியாய விலைக் கடை கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பைரமங்கலம் ஊராட்சி, அக்கொண்டப்பள்ளி கிராமத்தில் ராயக்கோட்டை முதல் அத்திப்பள்ளி செல்லும் தேசிய நெடுஞ்சாலைக்காக வீடு இழந்த 11 குடும்பத்தினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு தற்போது கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ், வீடுகள் கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், சின்னட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.8 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் கட்டிடம் பழுதுபார்க்கப்பட்ட பணிகளையும், மேலும், மாணவர்களின் வாசிப்பு திறன், ஆங்கில எழுத்து திறன்களை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, ஜெக்கேரி கிராமத்தில், வேளாண்மைத்துறை சார்பாக, விவசாயி.இராமேஷப்பாபு த/பெ. காசப்பா , முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ், உயிரம் மாதிரி பண்ணைத்திடல் அமைத்து பாரம்பரிய நெல் இரகமான தூயமல்லி நெல் விதையினை ரூ.10,000 (100 சதவிகித மானியம்) மானிய விலையில் பெற்று சாகுபடி செய்யப்பட்டுள்ளதை பார்வையிட்டார். வேளாண்மைத்துறையின் மூலம் அளிக்கப்பட்ட பயிற்சிகளின் மூலம் தனக்குதேவையானஇடுபொருட்களை இயற்கையான முறையில் தானே தனது வயலில் சொந்தமாக தயாரித்து பயன்படுத்துவதால்,இடுபொருள் வாங்கும் செலவு குறைவதுடன், தரமான இயற்கை விவசாயம் செய்து தனது வருமானத்தினை பெருக்கி, இயற்கைச் சூழலையும் பேணி பாதுகாத்து வருவதாக விவசாயி கலெக்டர் அவர்களிடம் தெரிவித்தார்.

மேலும், விவசாயி ஜனார்தன் தபெ. கிருஷ்ணப்பா அவர்களுக்கு வேளாண்மை இயந்திரமாக்கல் திட்டம் 2024-25 (ஜூலை, 2024-25) கீழ், ரூ.1,13,566 மொத்த விலையில், ரூ.66,778 (50%) மானியத்தில் இயந்திரங்களை எடுக்கும் கருவியை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) கவிதா, செயற்பொறியாளர் மலர்விழி, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் இந்திரா, வேளாண்மை உதவி இயக்குநர் ஜான் லூர்து சேவியர், வேளாண் அலுவலர் அருள்தாஸ், துணை வேளாண் அலுவலர் வெற்றிவேல், உதவி வேளாண் அலுவலர்கள் முனிராஜ், ரவிச்சந்திரன், வினோத் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் சதீஷ்பாபு உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தில் சேந்தமங்கலம் வட்டத்தில் அரசின் திட்டங்கள், சேவைகள், செயல்பாடுகள் குறித்து கலெக்டர் ச.உமா கள ஆய்வு



நாமக்கல்,மார்ச்.28-

நாமக்கல் கலெக்டர் மருத்துவர் ச.உமா, (26.3.2025) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் அரசின் திட்டங்கள், சேவைகள், செயல்பாடுகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 23-11-2023 அன்று அரசின் அனைத்து நலத்திட்டங்களும், சேவைகளும் தங்குதடையின்றி விரைந்து மக்களைச் சென்றடைவதை உறுதி செய்திட வேண்டுமென்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில், 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' என்ற புதிய திட்டத்தை அறிவித்தார்கள்.

அதனடிப்படையில், நாமக்கல் கலெக்டர் மருத்துவர் ச.உமா. சேந்தமங்கலம் வட்டம், எருமப்பட்டி பேரூராட்சி பேருந்து நிலையத்தில் கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவு பொருட்களின் தரம், விற்பனை விபரம், பொருட்களின் காலாவதி காலம் குறித்து ஆய்வு மேற்கொண்டு, கடை உரிமையாளர்களிடம் உணவுப்பொருட்களை விற்பனை செய்யும் போது சுற்றுப்புறத்தை பாதுகாக்கும் வகையில் துணி பை மற்றும் மஞ்சப் பைகளை உபயோகிக்குமாறு உத்தரவிட்டார். பேருந்து நிலைய பொது சுகாதார வளாகத்தில் ஆய்வு மேற்கொண்டு வளாகத்தை தூய்மையாக பராமரிக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, பேருந்து பயணிகளிடம் சுகாதார வளாகத்தை முறையாக தூய்மை செய்கின்றார்களா என்றும் கேட்டறிந்தார். மீனா திரையரங்கம் புதுப்பிக்கப்பட்டு அனுமதி வழங்குவது குறித்து அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கைகாட்டி பிரிவில் செயல்பட்டு வரும் அடுமனை (பேக்கரியில்)ல் விற்பனை செய்யப்படும் இனிப்புகள் மற்றும் கார உணவுப்பொருட்களின்தரம், கேக், குளிர்பானம் மற்றும் ஐஸ்கிரீம் உள்ளிட்ட பொருட்களின் விலை மற்றும் காலாவதி காலம், கேக் தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விபரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். கடைக்கு வருகை தந்த வாடிக்கையாளர்களிடம் கலந்துரையாடினார்.

தொடர்ந்து, அலங்காநத்தம் அங்கன்வாடி மையத்தில் ஆய்வு மேற்கொண்ட கலெக்டர் வருகை தரும் மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை, குழந்தைகளுக்கு வழங்கப்படும் இணை உணவுகள், உணவுப் பொருட்களின் இருப்பு, தரம் ஆகியவை குறித்தும், போஷான் செயலியில் குழந்தைகளின் தரவுகள் பதிவேற்றம் செய்யப்படுவது குறித்தும் சத்துணவு அமைப்பாளரிடம் கேட்டறிந்தார். அலங்காநத்தம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தார் சாலையின் தரம், நீளம், அகலம், சாலை அமைக்க பயன்படுத்தப்பட்ட பொருட்களின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, அக்கியம்பட்டி, கே.பி.எஸ் திருமண மண்டபத்தில் கலெக்டர் மருத்துவர் ச.உமா, தலைமையில் சேந்தமங்கலம் வட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் அரசின் திட்டங்கள், சேவைகள், செயல்பாடுகள் குறித்து பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் மேற்கொண்ட கள ஆய்வு தொடர்பாக ஆய்வு கூட்டம் நடைபெற்றது. மேலும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.14,350/- மதிப்பில் சக்கர நாற்காலி மற்றும் 1 மாற்று திறனாளிக்கு ரூ.6,850/- மதிப்பில் மூன்று சக்கர சைக்கிள் என மொத்தம் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.21,200/- மதிப்பில் உதவி உபகரணங்களை கலெக்டர் மருத்துவர் ச.உமா, வழங்கினார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சு.வடிவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன்

# பாலக்கோட்டில் உணவு பாதுகாப்புத்துறையினர் மீன் விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு

தர்மபுரி,மார்ச்.28-

தர்மபுரி மாவட்டம், ஒகேனக்கல் பகுதியில் கடந்த சில வாரங்களாக மீன் இறைச்சி ஆய்வு செய்ததில் ஒரு சில சில்லறை, மொத்த விற்பனை நிலையங்களில் இருந்து தரமற்ற, நாட்பட்ட மீன்கள் பறிமுதல் செய்து அழிக்கப்பட்டதன் அடிப்படையில் , மாவட்ட கலெக்டர் ரெ.சதீஷ்,ஐ.ஏ.எஸ்., மாவட்டத்தில் பிற பகுதிகளில் தரமான மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதன் அடிப்படையில்,



பாலக்கோடு மீன் மார்க்கெட் பகுதியில் உள்ள மீன் விற்பனை நிலையங்களில் உணவு பாதுகாப்புத் துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானு சுஜாதா, எம்.பி.பி.எஸ்., மற்றும் மீன்வளத்துறை உதவி இயக்குனர் கோகுலரமணன் மேற்பார்வையில் காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் , மீன்வளத்துறை ஆய்வாளர் சந்தோஷ், சார் ஆய்வாளர் திருப்பதி மற்றும் மீன்வளத்துறை பாதுகாவலர் தாமோதரன், உதவியாளர் முரளி உள்ளிட்டோர் மீன் விற்பனை கடைகளில் திடீர் ஆய்வு செய்தனர்.

பத்துக்கும் மேற்பட்ட கடைகளில் ஆந்திரா, மேட்டூர் பகுதியில் இருந்து வரவழைக்கப்பட்ட மீன்கள் ரூப் சந்த்(பாறைமீன்), ரோகு,மிர்கால் மற்றும் உள்ளூர் திலேப்பியா மீன்கள் விற்பனை காணப்பட்டதில், ஆய்வில் மீன் விற்பனை நிலையங்களில் தரமற்ற மீன்களோ, ரசாயனம் கலந்த மீன்களோ, பழைய கெட்டுப் போன மீன்களோ விற்பனை செய்யப்படவில்லை என அறியப்பட்டது. மீன் மார்க்கெட் மீன் விற்பனை கடை உரிமையாளர்களுக்கு தன் சுத்தம், சுற்றுப்புற சுகாதாரமான முறையில் பேணி , தரமான மீன்களை விற்பனை செய்ய வும் மேலும் மீன்களை ஐஸ் பெட்டிகளில் இரண்டு மற்றும் மூன்று நாட்களுக்கு மேல் இருப்பு வைக்காமல் விற்பனை செய்யவும், வெயில் படாத வகையிலும் , காட்சிப்படுத்தி வைக்கும் மீன்களை அதிக நேரம் வெளியில் வைக்காமலும், வெயில் படாமலும் உடனுக்குடன் விற்பனை செய்யவும், உணவு பாதுகாப்பு மற்றும் மீன்வளத் துறையின் விழிப்புணர்வு செய்தனர். மேலும் இது போன்ற ஆய்வுகள் தொடர்ச்சியாக நடைபெறும் எனவும் விதிமுறைகள் மீறும் பட்சத்தில் அபராதம் விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

# சமூக நீதி உரிமைகள் பாதுகாப்பு கவுன்சில் அமைப்பின் கலந்தாய்வு கூட்டம்



தருமபுரி,மார்ச்.28-

தருமபுரி தனியார் மண்டபத்தில் சமூக நீதி உரிமைகள் பாதுகாப்பு கவுன்சில் அமைப்பின் சார்பாக தருமபுரி மாவட்ட கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாநில குழு உறுப்பினர் செ. காளியப்பன் தலைமை தாங்கினார். மாநில தலைவர்சாமி, மாநில பொருளாளர் இல. சு. முத்துச்சாமி, மாநில ஒருங்கிணைப்பாளர் கோ. செல்வம்,மாநில இளைஞரணி செயலாளர் ஆதவன், மண்டல தலைவர் திருவாசகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தை இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் இள பிரபாகரன் தொகுத்து வழங்கினார். மாவட்ட செயலாளர் என். காளியப்பன், வரவேற்புரையாற்றினார். நிறுவனர்-பொதுச்செயலாளர் க. மா. இளவரசன் கூட்டத்தின் நோக்கவுரையாற்றினார்.

கூட்டத்தில் தருமபுரி மாவட்டம் சார்பாக மாவட்ட தலைவர் மூக்கன்,மாவட்ட அமைப்பாளர் சுகாதேவன், மாவட்ட செயல் தலைவர் சரவணன், மாவட்ட துணைத் தலைவர் சண்முகம் , கிருஷ்ணகிரி மாவட்ட கூடுதல் செயலாளர்முத்து, ஒசூர் மாநகர மாவட்ட செயலாளர் சத்திய நாராயணன், குளகிரி சுரேஷ், கம்பைநல்லூர் பேரூராட்சி தலைவர் வெற்றிவேல், சோகத்தூர் வெங்கடேசன், தருமபுரி மாவட்ட பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர் நிறைவாக . தருமபுரி மண்டல செயலாளர் சிவராஜ் நன்றியுரையாற்றி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.நிகழ்ச்சியில் பக்தசிங்,ராஜகுரு,சுகதேவ் அவர்களின் நினைவு நாளுக்கு புரட்சி வணக்கம் செலுத்தப்பட்டது. அமைப்பின் சார்பாக புதிய பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போச்சம்பள்ளி.
I.A No:7 / 2024 in
O.S. No: 2 / 2015

மாரியம்மாள் க/பெ. புல்லான், பண்ணந்தூர் கிராமம் மற்றும் அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். மனுதாரர்/வாதி

//எதிராக//

சவிதா க/பெ. ராமச்சந்திரன், கொடமாண்டப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். 18-ம் எதிர்மனுதாரர்/ உத்தேச பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி வாதி மேற்படி மனு வழக்கினை பாகப்பிரிவினை, உரிமை விளம்பரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த போது நீங்கள் மற்ற பிரதிவாதிகளுடன் வழக்கு சொத்துக்களைப் பொறுத்து மோசடியாக பராதீனத்தில் ஈடுபட்டதால் மேற்படி வழக்கில் தங்களை அவசிய தரப்பினராக சேர்க்கக்கோரி மேற்படி இடைமனு எண்: 7/2024-தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி மனு வழக்கு வருகின்ற 08.04.2025-ம் தேதிக்கு தங்களது ஆஜருக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி மனுவின் பேரில் ஆட்சேபனை இருப்பின் அன்றைய தினம் காலை 10.00-மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மனுவில் தங்களுக்கு எதிராக உத்திரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாக அறியவும்.

//நீதிமன்ற உத்திரவுபடி//

வாதியின் வழக்கறிஞர், M.JAYABALAN.B.A.B.L., Advocate, MS No:491/1997, Pochampalli Tk, Krishnagiri Dt-635206, Cell.No:9443058828.

**பொது அறிவிப்பு**

சேலம் மாவட்டம், சேலம் டவுன், கதவு எண்.26/1A, சாரதா காலேஜ் ரோடு, IMA ஹால் அருகில்,2ஆம் தளம், 5 ரோடு, சேலம்-4 என்ற முகவரியில் வழக்கறிஞர் தொழில் புரியும் R.கோபி, வழக்கறிஞர் ஆகிய நான், மேற்படி மாவட்டம், **Mr.Dharmalingam S/o. Pachamuthu,** Door No.21, Agathiyar Street, Erode, Tamilnadu - 638 001 and **Mrs. Devi W/o. Dharmalingam,** D.No.21, Agathiyar Street, Erode, Tamil Nadu - 638 001 ஆகிய இவர்களின் தகவல் பேரில் நான் விடும் பொது அறிவிப்பு என்னவென்றால் மேற்படியார்களின் சொந்த சுவாதீனத்தில் மற்றும் அனுபவத்தில் இருந்து வரும் கீழ்கண்ட சொத்துக்களின் **Sale deed Doc. No. 2983/2002 Dated : 09.08.2002 Registered at the Erode SRO, Sale deed Doc. No. 2984/2002 Dated : 09.08.2002 Registered at the Erode SRO** அசல் பத்திரங்கள் காணாமல் போய்விட்டது. மேற்படி அசல் ஆவணங்களை யாரேனும் கண்டெடுத்தால் எங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்படி சொத்துக்கள் சம்பந்தமாக வேறு யாரேனும் உரிமை கோருபவர்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 7 தினங்களுக்குள் தங்கள் எதிர்ப்புகளை தெரிவிக்கும்படி இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்து விவரம்

**Property -1 As per sale deed Doc.No.4682/2004**
Erode St, Erode RD, Erode SRO, Erode Town T.S.No. 1330/1A as per new ward D, Block No.26, T.S.No. 4 in this for an extent of 1386 Square feet of the land and all other easement rights.

**Property -2 As per sale deed Doc.No.4683/2004**
Erode St, Erode RD, Erode SRO, Erode Town T.S.No. 1330/1A as per new ward D, Block No.26, T.S.No. 4 in this for an extent of 1386 Square feet of the land and all other easement rights.

இப்படிக்கு: R.கோபி, M.L., வழக்கறிஞர், 5 ரோடு, சேலம்-4.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

